**வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் -2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் (AASL) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

என்னுடைய அறிக்கையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயங்களை வலியுறுத்துதல்

(அ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களை மூலதனச் செலவினங்களுக்கான அரசாங்க மானியம் (வாக்களிக்கப்பட்ட நிதி) மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட வருமான நிதியத்துடன் இணைப்பதற்கான அடிப்படையை விளக்கும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.1.1 மீது நான் கவனத்தை ஈர்க்கின்றேன். 2005 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில், திறைசேரியின் செயலாளர் 2006 பெப்ரவரி 09 இல் தனது கடித இல. பிஈ/ஜீஓசீஓ/1/1 மூலம் தற்போது அரசாங்கத்திற்கு சொந்தமான விமான நிலையத்தின் காணி மற்றும் கட்டிடம் மற்றும் கம்பனி வைத்திருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கும் முன்னர் இலங்கை அரசாங்கத்தால் சேவையாற்றப்பட்ட விமான நிலைய அபிவிருத்தி தொடர்பான பொறுப்புக்களை கையேற்பதற்கும், தேறிய சொத்து பெறுமதிக்கான பங்குகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கும் கம்பனிக்கு கட்டளையிட்டிருந்தார்.

மேலும், மேற்படி அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்துவது தொடர்பான கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில், சட்டமா அதிபர் தனது 2010 பெப்ரவரி 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் புதிய அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்தார். தற்போது சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான முறையே விமான நிலையத்தின் (கள்) நிலைங்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் மாற்றுவது இதில்

உள்ளடங்குகின்றன. எனினும் நாளதுவரை புதிய அமைச்சரவை தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனியால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், மேற்குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் அமுலாக்கலில் கம்பனியின் வேண்டுகையில் சட்டமா அதிபர் நாயகம் சிவில் விமான அதிகாரசபை மற்றும் இலங்கை அரசாங்கத்தல் தற்போது உடமையாக்கப்பட்ட உள்ளக மாற்றம், விமான நிலையங்களின் காணி மற்றும் கட்டிடங்களின் மாற்றம், மற்றும் சகல அசையும் மற்றும் அசையாத சொத்துக்களின் என்பன தொடர்பாக 2010 பெப்ரவரி 08 ஆந் திகதிய கடிததம் மூலம் புதிதாக அமைச்சரவை அனுமதி பெறுவதற்கு ஆலோசனை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், இத்திகதி வரை புதிதாக அமைச்சரவை தீர்மானத்தை பெறுவதற்கு கம்பனியால் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) ‘‘ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிகழத்தக்க பொறுப்பக்களின் விளக்கங்கள் குறிப்பு இல. 29 இற்கு நான் கவனம் செலுத்துகின்றேன். நிதி அமைச்சால் வழங்கப்பட்ட ‘‘இலங்கையினுடைய வெளிவாரி அரச கடன் சேவை தொடர்பான இடைக்கால கொள்கை’’ மீதான 2022 ஏப்ரல் 12 ஆந் திகதிய சுற்றறிக்கை பிரகாரம், அரசாங்க வருகையாளர்களால் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்களை பெறுவதற்கு நெறிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட சுற்றறிக்கையுடன் நிறுத்தப்பட்ட JICA கடன் கைதவிர்ப்புகளிருந்து செயற்திட்டத்தை தொடருவதற்கு நிராகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரரால் BIA அபிவிருத்தி கட்டம் II மட்டம் 2 செயற்திட்டத்தின் (பொதி ஏ –பயணிகள் வருகை கட்டிடம் மற்றும் இணைந்த வேலைகள்) தொடருகின்ற நிர்மாண வேலைகள் பாரதூரமாக பாதிக்கப்பட்டது.

JICA கடன் திருப்பிச் செலுத்தல்களின் தொடர்ச்சி தொடர்பில் நிதி அமைச்சிடமிருந்து வலியுறுத்தலை வேண்டியிருந்தது. 2022 திசெம்பர் 09 இலிருந்து AASL உடன் ஒப்பந்தத்தை நிறுத்தியிருந்த ஒப்பந்தகாரர் தைசி கோப்பரேசன் IMF மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலுத்த வேண்டியவை தொடர்பில் நிதி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

முன்னுனர்வின் ஒரு பகுதியாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கை திட்டம் ரூபா 800 மில்லியன் அண்ணளவாக மதிப்பிடப்பட்ட கிரத்துடன் AASL இடமிருந்தான நிதிகளை பயன்படுத்தி மேற்குறித்த செயற்திட்டத்தின் இரும்பு வலிமையூட்டிய பகுதியளவு பூர்த்தியாக்கப்பட்ட கட்டமைப்பில் சீர்ப்படுத்தல் பிரச்சனை வெளிப்படுத்துவதற்கு மேற்குறித்த செயற்திட்டத்தின் நோக்கெல்லையை இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் தொடங்கப்பட்டது.

மேலும், செயற்திட்டத்தின் ஆலோசனையாளர் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு 2023 மே 29 இல் ஜ.யென் 13,608,871,178 மற்றும் ரூபா 10,045,759,810 தொகையான இடைநிறுத்தல் மீதான கொடுப்பனவுக்கூற்றை மதிப்பாய்வு செய்தல் செயற்பாட்டில் உள்ளது. இந்த தொகை முன்னரே செலுத்தப்பட்ட சகல IPC கள் மற்றும் முற்பண கொடுப்பனவு கழித்த பின்னராக ஆனால், செலுத்தப்படாத IPC 5 மற்றும் IPC 6 உள்ளடங்கலாக உள்ளது. (ஜ.யென் 444,498,046 மற்றும் ரூபா 1,486,804,716 தொகை).

மேற்குறித்த செலுத்தப்படாத தொகைக்கு மேலதிகமாக, தாமதப்பட்ட கொடுப்பனவுகளிற்காக கோரிக்கை மற்றும் நிதியளிப்பு கட்டணம் என்பன இறுதியாக்கும் வரை ஒப்பந்தகாரருடைய மாதாந்த சுழற்சிக் கிரயம் இறுதி கொடுப்பனவு அட்டுறுவாக இருக்கும்.

மேற்குறித்த கோரிக்கையின் செயற்பாட்டிலுள்ள மதிப்பாய்வின் பிரகாரம் இது ஆலோசனையாளரால் மேற்கொள்ளப்பட்டது, கோரிக்கையின் இறுதி மதிப்பாய்வு

தொகை அண்ணளவாக ஐ.அ.டொலர் 55 மில்லியனாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

மேலும், வெளிநாடுகளில் ரூபா 1,660 மில்லியன் பெறுமதியான சில பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளதுடன் இவற்றினை விட பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்ட கட்டத்தில் உள்ளன. AASL இன் தலைவரால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுகளுடன் மற்றும் ஆலோசனையாளரின சிபார்சுகளுடன் இலங்கைக்கு கொண்டுவருவதற்கோ அல்லது வெளிநாட்டில் கைதவிர்ப்பதற்கான தீர்மானத்தில் இறுதியாக்கப்படுகின்றன.

இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவு கூற்றுடன் JICA கடனின் மிகுதியபக இருந்த கடன் தொகை மீதியாக இருக்கின்ற பொதி ஏ இன் வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு போதியதாக இருக்கவில்லை. இதன்படி, இந்த செயற்திட்டத்தின் மீகுதியாக இருக்கின்ற வேலைகளை மேற்கொள்வதற்கு மேலிக நிதியை பெறுவதற்கு அவசியமாக உள்ளது.

மேலும், இடைநிறுத்திய செயற்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் முந்திய வடிவமைப்பு ஆலோசனை சேவைகள் என்பவற்றிற்காக ஒப்பந்தத்தின் உத்தேசிக்கப்பட்ட திருத்த இல. 5 இன் கீழ் ஆலோசனை சேவை கோரிக்கைக்கு மேலதிகமான கோரிக்கையின் மதிப்பாய்வு, மீள்கேள்விகோரல் ஆவணம் தயாரித்தல், வேலை நோக்கெல்லையை இனங்கண்டு மேற்பார்வை செய்தல், போன்றன உள்ளடங்கலாக இடைநிறுத்தல் நடைமுறையின் தீர்மானத்திற்காக தொடர்ந்து வைத்திருக்க வேண்டியிருந்தது அத்தகையவாறு கோரிக்கைகள் இறுதியாக்கப்பட்டிருந்தது, முகாமைத்துவம் அந்தேநரத்தில் ஏற்பாடுகள் செய்யாமல் உள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கம்பனியின் ஆளுகை சபையால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகளை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.**

**1.5 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 முதல் 2023 வரையான காலத்தின் போது கம்பனியின் செயற்பாடுகளிற்காக பயன்படுத்திய செயற்திட்டத்தின் பெறுமதி மற்றும் மூன்று கொள்வனவுகளின் கூட்டுமொத்தப் பெறுமதி முறையே ரூபா 4,761 மில்லியன் மற்றும் ரூபா 1,544 மில்லியனாக இருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டம் மற்றும் கொள்வனவுகளின் கிரயம் இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 7 மற்றும் 55 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு மூலதனமாக்குவதற்கு பதிலாக | செயற்திட்ட பொதி பீ பகுதி 2024 பெப்ரவரியில் மூலதனமாக்கப் பட்டதுடன் மிகுதியாக இருப்பவை இறுதி விலைப்பட்டியல் பெற்ற பின்னர் 2024 மே மாதத்தில் மூலதனமாக்கப்படும்.<br>கொள்வனவு<br>அ). ஒப்பந்த பிரகாரம் FAC வழங்கப்பட்ட போது கொடுப்பனவின் பூர்த்தியாக்கல் செய்யப்படும். இது ஒப்பந்தகாரருக்கு செய்ய வேண்டிய எதிர்காலத்தில் கொடுப்பனவு காரணமாக | இலங்கை கணக்கீட்டு நியத்தின் பிரகாரம், சொத்துக்களுடன் திரண்ட எதிர்கால நன்மைகள் வருகைக்கான போக்காக உள்ளதுடன் கிரயம் பொருண்மையாக மதிப்பிட முடியும். சொத்துக்களை இனங்காண நடவடிக்கை எடுக்க வெண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிநிலைமை கூற்றில் நடைமுறை வேலைகள் (WIPP) மற்றும் இடைப்போக்கிலுள்ள பொருட்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உள்ளது.<br>ஆ). தொடங்கப்பட்ட செயற்பாட்டு முறைமை இன்னமும் நிதிச் சொத்தாக மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை மென்பொருள் அடிப்படை செயற்திட்டங்கள் தொடர்பில் நிதிப் பிரிவு மற்றும் E & ANE இற்கும் இடையிலான உடன்படிக்கை இருந்ததுடன் தலைவருடை அறிவுறுத்தல் பிரகாரம் தனிப்பட்ட விடயங்களாக AIM முறைமையை மூலதன மாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>இ) மேற்குறிப்பிட்டவற்றினை போல | கணக்கீட்டு கொள்கை பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | SLFRS 16 இன் பிரகாரம், ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் நீண்டகால குத்தகை காணிகள் தொடர்பில் கம்பனியானது ஒப்பந்த நுழைவுகளிற்கோ அல்லது கவனத்திற் கொள்வதற்கான பரிமாற்ற காலப்பகுதிக்காக இனங்காணப்பட்ட சொத்துக்களின் பயன்படுத்தலை கட்டுப் படுத்துவதற்கு உரிமையை ஒப்பந்தம் கொண்டிருக்குமாயின் குத்தகை கொண்டிருக்கும். இனங்காணப்பட்ட சொத்துக்களின் பயன்படுத்தலை கட்டுப் படுத்துவதற்கு உரிமையை ஒப்பந்தம் கொண்டிருப்பமை மதிப்பிடுவதற்கு கம்பனியானது SLFRS 16 இல் குதைத்தகையாக இனங்கண்டு பயன்படுத்தகின்றது. பின்னர், கம்பனியானது குத்தகை தொடங்கிய திகதியில் சொத்து பயன்படுத்தல் உரிமையை அங்கீகரிக்க வேண்டும். எவ்வாறாயினும், 2008 இலிருந்து தொடங்கி 30 ஆண்டுகளிற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து எடுத்திருந்த 0.561 ஹெட்டெயர் பரப்பளவுடைய கதிர்காமம் உத்தியோகத்தர் சுற்றுலா விடுதியின் குத்தகை காணி தொடர்பில் SLFRS 16 இல் குறிப்பிடப்பட்டவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>இவற்றினை விட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பு இல. 11(ii) இல் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | SLFRS 16 இன் 5 ஆம் பிரிவின் பிரகாரம், குத்தகை பொறுப்பு அங்கீகார தவிர்ப்பு குறைந்த பெறுமதியுடைய சொத்தக்களாக இருந்தவையை குத்தகைக்கா வழங்கப்பட்டிருந்தது. 06 ஆம் பிரிவின் விளக்கங்களும் அங்கீகரித்த தேவைகளை பிரயோகிப்பதற்கு குத்தகை இலக்குகள் இருக்கவில்லை. குத்தகையாளர் குத்தகைக் கொடுப்பனவை செலவினமாக கருத வேண்டும். அதேபோல AASL ஆனது 2061 ஆம் ஆண்டிற்கு பின்னர் வருடாந்த குத்தகை கொடுப்பனாக ரூபா 5.9 மில்லியன் மாத்திரம் பிரயோகிக்கப்பட்டதுடன் 2061 ஆம் ஆண்டிற்காக ஒரே தடவை கொடுப்பனவாக ரூபா 17.8 மில்லியன் உள்ளது. குத்தகை கொடுப்பனவின் பெறுமதியில் 10 சதவீதத்தில் இந்த வருடாந்த வாடகை கொடுப்பனவு கழிவு ரூபா 50,554 மற்றும் ரூபா 151,663 மாத்திரமேயாக உள்ளது. . | SLFRS 16 இன் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பொறுப்புகள் மீதான கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம், செயற்பாட்டு வட்டி முறையை பிரயோகித்து திரண்ட கிரயத்தில் பின்னர் பங்கிலாபம் அளவிட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 4,000 மில்லியன் பங்கிலாபம் மதிப்பிடப் பட்டிருக்காததுடன் இதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டு வட்டி வீதத்தை பயன்படுத்தி திரண்ட கிரத்திற்காக கணிப்பீடு செய்யப்பட்டது. அர்த்தமில்லலாத வித்தியாசம் ரூபா 164 மில்லியனாக இருந்தது. | கணக்கீட்டு கொள்கையின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டியிருந்தது. |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான அதிகாரசபையின் அதிகாரச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரின் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் நன்மைகளால் 2017 திசெம்பர் 21 ஆந்திகதிய 2050/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமாணியில் வெளியிடப்பட்ட கட்டளைகள் மூலம் அமைச்சர் இலங்கை சிவில் விமான அதிகாரசபையின் (CAASL) இரண்டாவது பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஆகாய விமானங்கள் (கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் இரத்மலானை விமான நிலையம்) மற்றும் ஏழு ஆகாய வான்வெளி வசதிகள் மற்றும் மேற்குறித்த அதிகாரச் சட்டத்தின் மூன்றாவது பட்டியலில் குறித்துரைத்த அவற்றினை சார்ந்திருக்கும் காணிகள் (அவற்றினை சார்ந்திருக்கும் காணிகளிலுள்ள கட்டிடம் மற்றும் உட்கட்டமைப்பு) என்பனவற்றினை மாற்றி உடமையாக்கியிருந்தது. எவ்வாறாயினும் கம்பனியானது CAASL இடமிருந்து ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளாமல் நியதிச் சேவைகள் வழங்குபவராக விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 1983 இல் முன்னாள் கம்பனி திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 வரை ரூபா 60,141 மில்லியன் தொகை (ஆதனம், பொறி, உபகரணங்கள் மற்றும் நடைபெறும் வேலைகள்) என்பவற்றினை முதலீடு செய்திருந்தது. ஆகவே, கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கட்டிடங்களின் உரிமையாண்மை தெளிவாக்கப் பட்டிருக்கவில்லை. . | 2023.06.21 இல் நடைபெற்ற் இரண்டாவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) கூட்ட குறிப்பு பிரகாரம் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள அமைச்சு செயலாளர் - AMC தலைவர், காணிகளின் உரிமையாண்மை CAASL உடமையாக இருந்த பொதிலும் AASL செயற்பாட்டாளராக மாத்திரம் உள்ளது. AASL அதன் முதலீடுகளை இதன்படி மேற்கொள்வதற்கு தடைகள் எதுவும் இருக்கவில்லை என குறிப்பிட்டிருந்தார். | முதலீடுகள் உரிய அதிகாரியின் அனுமதி பெற்ற பின்ரே செய்யப்பட வேண்டியதுடன் இந்த விடயம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையால் தொடங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 பெப்ரவரி 07 ஆந் திகதிய அமප/23/0154/604/014 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், AASL | நிதி அமைச்சிற்கு 2023 திசெம்பர் 22 ஆந் திகதி AASL கடிதத்தை | புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடல் தொடர்பில் பொது திறைசேரியுடன் |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை அரசாங்கத்துடன் (GOSL) புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட வேண்டப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ஐ.அ.டொலர் 102.4 மில்லியனிற்கு சமமான ரூபா 33,676 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் தொகை கணக்கேடுகளில் சீராக்கப்பட வேண்டும். அத்துடன் பொது திறைசேரிக்கு ரூபா 2,946 மில்லியனிற்கு சமமான கடன் சேவை தவணைக்கட்டணம் அனுப்புவதற்கும் வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், கம்பனி புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை கைச்சாத்திடுவதற்கும் கணக்கேடுகளை சீராக்குவதற்கும் பொதுத் திறைசேரிக்கு தவணைப் பணங்களை அனுப்புவதற்கும் தவறியிருந்தது. | அனுப்பியிருந்ததுடன் அமைச்சரவை தீர்மானம் மற்றும் வரைவு புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை அனுப்புவதற்கு வேண்டியிருந்தது. அத்திகதி வரை எவ்வித பதிலையும் பெற்றிருக்கவில்லை. நிதி அமைச்சுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட்டால் மாத்திரமே அந்த சீராக்கல்களை செய்ய முடியும்.<br><br>மேலும், இலங்கை அரசாங்கத்துடனான இடைக் கால கடன் கொள்கை இந்த இரட்டை வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதற்கு AASL அனுமதித்திருக்கவில்லை. நிதி அமைச்சால் அனுப்ப வேண்டிய தேவையிருந்த அமைச்சுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட்டால் மாத்திரமே கடன் திருப்பி செலுத்தல்கள் செய்ய முடியும். | கலந்துரையாடல் தொடங்க வேண்டியிருந்தது. புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திட்ட பின்னர் வெளிநாட்டு கடன் கணக்கு ஏடுகளில் சீராக்கல் செய்தல் மற்றும் கடன் தவணைப் பணங்களை அனுப்புதல் செய்யப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2022 பெப்ரவரி 28 ஆந் திகதிய PMU/BIADP/07(PK/b)/04845/22 ஆம் இலக்க கடிதம் மூலம் கம்பனிக்கு 19 வாகனங்களை கையளித்திருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் அவற்றினை பெறுமதியிட்டு கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதி பீ இன் பூர்த்தியாக்கலின் பின்னர் 2023 திசெம்பர் மாதத்தில் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு குழு நியமிக்கப்பட்டிருந்தது. சகல 19 வாகனங்களும் 2024 பெப்ரவரி மாதத்தில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | உரிய நேரத்தில் வாகனங்களை பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொருளாதார நலன் போக்கினை பதிவதற்கு அத்திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு செய்ய வேண்டும். |
| (ஈ) | MRIA இல் வியாபார தொடக்கத்திற்கு சொத்தமான ரூபா 25,683,713 தொகையான சொத்துக்கள் மூலதன மாக்கப்படாமல் விமான நிலைய தொடக்கத்திலிருந்து நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது. | குளிரூட்டி பௌதீக மெய்மையாய்வு செய்யப் பட்டதுடன் 2024 மே மாதத்தில் மூலதன மாக்கப்படும். MRIA செயற்திட்ட தொடக்கத் திலிருந்து தளபாடம் ஏற்கனவே மூலதனமாக்கப் பட்டிருந்தது. இதன்படி பதிவுகள் செய்யப்படும். | சொத்துக்களைத் தனித் தனியாக இனங் காணப்பட்டதுடன் பொருளாதார நலன் போக்கினை பதிவதற்கு அத்திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு செய்ய வேண்டும். |
| (உ) | கந்தபொல இறங்கு துறையில் ரூபா5.1 மில்லியன் பெறுமதியான பாய்மரக் கப்பல், பல்துறை விமானத்திற்கான ஒளியூட்டல் மற்றும் மேற்பரப்பு பாதுகாப்பு 2023 திசெம்பர் | வுஇந்த முறைமை தலங்காம இறங்கு துறையில் நிலத்திற்கு அடியில் 3 அடி காணியிருந்த நிலத்தடி | கிடைக்காத அல்லது கிடைக்காத சொத்துக்களை இனங்காண்பதற்கு முழுமையாக |

| | | |
|---|---|---|
| 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வின் போது செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது மேற்குறித்த உபகரணங்கள் வேலைத் தளத்தில் இருக்கவில்லை. | மேற்பரப்பு பாதுகாப்பு வலையமைப்பாக உள்ளது. இந்த காணி மற்றும் கட்டிடங்கள் MOD ஆல் கையளிக்கப்பட்டிருந்தது. கூப்பர் ஸ்றீப் மற்றும் றொட்களை ஈர்ப்பதற்கு அந்த வளவு மற்றும் கட்டிடங்களின் பாரிய நிலப் பகுதியை அகழ்வதற்கு AASL இற்கு நடைமுறைக்கு சாத்தியமற்றதாக இருந்தது. ஆகவே, பின்வரும் முறையான நடைமுறை ERP சொத்து பதிவேட்டிலிருந்து இந்த விடயத்தை அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. | சொத்துக்களின் பௌதீக உள்ளதன்மை மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியதுடன் கிடைக்காதுவிடின் முறையான அனுமதி பெற்ற பின்னர் தேவையான சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 அனுமதிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2023 திசெம்பர் 11 ஆந் திகதிய பீஈடி/04/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்காக சகலதையும் உள்ளடக்கி ஊழியர் ஒருவரிற்கு ரூபா 125,000 ஆன ஆகக்கூடிய மிகையூதியம் வழங்கப்பட்டிருந்தது. மிகையூதியமாக கருதவேண்டிய இடைக்காலப் படிகள் அதன் ஊழியர்களிற்கு எந்த நிறுவனத்தாலும் செலுத்தப்படும் போது இது ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட்ட வருடாந்த மிகையூதியத்தின் முற்பணமாக கருதப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் அமைச்சரவை மேலதிக மிகயூதியமாக அத்தகைய கொடுப்பனவை கருதுவதற்கு விசேட அனுமதி வழங்கியிருந்தது. மேலும், கம்பனியால் வழங்கப்பட்ட உள்ளக நினைவூட்டலின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 5,000 தவணைப் பணமாக சம்பளத்திலிருந்து 2023 ஏப்ரல் மாதத்தில் (3,569 ஊழியர்களிற்காக ரூபா.177,843,750 கூட்டு மொத்தமான மிகயூதியம்) ஊழியர் ஒருவரிற்கு ரூபா. 50,000 | வரித் தாக்கம் காரணமாக கிளைத் தலைவர் உள்ளடங்கலாக வீட்டு மிகையூதிய பெறுமதி எடுத்தல் 2023 திசெம்பரில் ஆண்டிறுதி மிகையூதிய கொடுப்பனவை செய்யும் நேரத்தில் கட்டாயமாக கழிக்கப்பட்டிருந்தது. ஆகவே, சில உத்தியோகத்தரிடமிருந்து அவர்கள் சுய விருப்பில் திசெம்பர் மாதத்தின் போது கம்பனிக்கு முற்பண மிகையூதியத்தை திருப்பி பெற்றிருந்த முழு கொடுப்பனவும் கழிக்கப் பட்டிருக்கவில்லை. 2024 சனவரியில் நடைபெற்ற சபை கூட்டத்தில் உத்தியோகத்தர் நிலையிலிருந்து இந்த தாக்கத்தை கருத்தில் கொள்கின்றது. 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்படும் வண்ணம் இந்த மாதாந்த தவணைபண தொகையை கழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. பின்னர் உரிய அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தலில் முகாமைத்துவம் 2024 ஏப்ரல் மாத தவணைபண கழித்தலை தற்காலிகமாக பிடித்து வைத்திருக்க தீர்மானித்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட இடைக்கால படிகள் அறவிட வேண்டியிருந்தது |

வீதம் செலுத்தப்பட்ட இடைக்கால முற்பணத்தை கழிப்பதற்கு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், மேற்குறித்த இடைக்கால படிகள் இன்னமும் கம்பனியால் வருடாந்த மிகையூதியம் அல்லது சம்பளத்திலிருந்தோ கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **மாத்தளையில் பராமரிப்பு திருத்தம் மற்றும் பழுதுபாரத்த்தல் (MRO)**
2023 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய CP/13/1254/545/011-I ஆம் இலக்க அமைச்சரவை தாளின் பிரகாரம் ஐ.அ.டொலர் 122,030,389 ஆன மொத்த கிரயத்தில் மேற்குறித்த செயற்திட்டத்திற்கான மேலதிக வேலைகளை நிறைவேற்றுவதற்கு குறைநிரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, AASL வரையறுத்த சீனா துறைமுக பொறியியல் கம்பனியுடன் (CHEC). 2013 செப்தெம்பர் 06 இல் MRIA இற்காக கைச்சாட்திட்ட மூல உடன்படிக்கைக்கு (2009 நவம்பர் 27 இல் கைச்சாத்திடப்பட்ட ஹம்பாந்தோட்டை சர்வதேச அபிவிருத்தி செயற்திட்ட ஒப்பந்தம்) குறைநிரப்பு உடன்டிக்கை கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(ii) குறைநிரப்பு உடன்படிக்கையின் 01 ஆம் பிரிவின் பிரகாரம் சொல்லப்பட்ட வேலைகளிற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய கடன் நிதியளிப்பு வழங்குகின்ற சீனா மக்கள் குடியரசு அரசாங்கத்திற்கு பின்னராக ஒப்பந்தகாரருக்கு தொழில் கொள்வோனால் கவனத்தில் கொள்ள வேண்டிய திகதியில் மாத்திரமே உடன்படிக்கை செயற்பாட்டிற்கு வரும். எவ்வாறாயனும், AASL மேற்குறித்த வசதகளை பெறப்பட்டிருக்கவில்லை. ஆகவே, உடன்படிக்கை

AASL சீனா எக்சிம் வங்கியிடமிருந்து நிதியளிப்பதற்கு வேண்டப்பட்ட பொதிலும் வழங்கல் நிராகரிக்கப்பட்டது.

நிர்மாண வேலைகள் வலிமையான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் தொடங்கப்பட வெண்டும்.

தரப்பினர்களை கட்டுப்படுத்தியிருக்கவில்லை, ஏனென்றால், மேற்குறித்த செயற்திட்டத்திற்காக வர்த்தக ரீதியாக ஒப்பந்தத்தை செயற்படுத்துவதற்காக முன்னோடி நிபந்தனைகளாக சீனா எக்சீம் வங்கியுடன் சலுகை கடனை கம்பனியால் பெறப்பட்டிருக்கவில்லை. பின்னர், CHEC இற்கு 2013 ஒக்தோபர் 03 இல் கம்பனியின் தலைவரால் தொடங்குதல் கட்டளை வழங்கப்பட்டிருந்தடன் இதன்படி CHEC உடன்படிக்கையை உறுதி செய்யாமல் பயணிகள் வருகை கட்டிடத்தில் (PTB) புதிய தடுப்பு சுவரின் நிர்மாணம் தொடங்கியிருந்தது.

(iii) CHEC ஐ.அ.டொலர் 4,499,635 இற்காக 2016 செப்தெம்பர் 04 இல் 01 ஆம் இலக்க இடைக்கால கொடுப்பனவு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு CHEC ஆல் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையில் முரண்பாடு இருந்ததென கவனிக்கப்பட்டது. மேலும், CHEC ஆனது MMEZD/AV/04/AASL-MRIADEV ஆம் இலக்க கடிதம் மூலம் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சு செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தாமதப்பட்ட வடடியாக ஐ.அ.டொலர் 4,936,069 தொகையை கோரியிருந்ததுடன் ரூபா 565,491,077 இற்கு சமமான ஐ.அ.டொலர் 1,650,378 பட்டியல் பெறுமதியை துறைமுகங்கள் அமைச்சு செயலாளருடன் கலந்துரையாடிய பின்னர் குறைநிரப்பு அறிக்கை மீள்மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைத்துரைக்கப்பட்டது. இறுதியாக, CHEC மற்றும் AASL என்பன பொறியியலாளரால் சான்றுபடுத்தப்படாமலும் தாமத வட்டியை செலுத்தாமலும் ‘‘குவான்ரிம் ஒவ் மெறி’’ விலைப் பட்டியலிற்கான கொடுப்பனவு அனுமதி மற்றும் அனுமதிக்கப்பட்ட வடிவமைப்பு வேலைகளிற்காக பெறியியலாளர் அனுமதி அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டும்.

அந்த பெறுமதிகள் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சு செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் மூன்று தவணைகளில் மேற்குறித்த தொகையை செலுத்துவதற்கு உடன்பட்டு செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப் பிட்டவற்றில் ரூபா 187,603,537 (ஐ.அ.டொலர் 547,524) சிக்கனமற்றதாக இருந்தது, ஏனென்றால் பெரும்பாலான வடிவமைப்பு இன்று கொண்டிருப்பதை போல முறைப்படி இருக்காததுடன் கட்டிடங்களின் நிர்மாணம் இன்னமும் தொடங்கப் பட்டிருக்கவில்லை. | | |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா. 2,077,949,728 தொகையான இறங்குதுறை மற்றும் வாகனத் தரிப்பிட வியாபார கடன்பட்டோர் (சர்வதேச) 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாக இருக்கின்றது. முகாமைத்துவக் குழுவின் பிரகாரம், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு சிறீலங்கன் எயார் லையன்ஸ் இடமிருந்து இறங்குதுறை மற்றும் வாகனத் தரிப்பிடம் மீதான வட்டி மாற்றங்களை பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | ஒரு வருடத்திற்கு மேலான பிரதான மீதிகளான இறங்குதுறை மற்றும் வாகனத் தரிப்பிட வியாபார கடன்பட்டோர் (சர்வதேச) பின்வரும் கடன்பட்டோரை உள்ளடக்குகின்றது.<br><br>சிறீலங்கன் எயார் லையன்ஸ் - பதிவழிப்பதற்கு அமைச்சு அனுமதி பிரகாரம் இதனை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>வரையறுத்த ஏறோ லங்கா (தனியார்) – 2022/08/23 ஆந் திகதிய அமைச்சு கட்தம் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணப்பாளர் நாயகத்திற்கு 2020/10/31 வரை ஏறோ லங்கா லிமிட்டெட்டிற்கு செலுத்த வேண்டியவையை பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப் பட்டதுடன் தற்போதைய நிலைமை விபரங்களை கோரி அமைச்சிற்கு 2024/3/19 ஆம் திகதி கடிதமெனறை அனுப்பியிருந்தது.<br><br>வரையறுத்த லையன் எயார் (தனியார்) கம்பனி - 2024/6/29 ஆந் திகதிய உடன்படிக்கையில் ரூபா 744,983.17 தொகையான செலுத்த வேண்டிய தொகையை | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுதல் சாத்திய தன்மை கம்பனியின் சட்டப் பிரிவு உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

<table>
<tr>
<td></td>
<td>ஏற்பதற்கு சபை அனுமதி வழங்கப்பட்டதுடன் எந்தவொரு மீதியையும் பதிவழிப்பதற்கு அமைச்சு அனுமதித்திருந்தது.<br><br>2022/4/26 ஆந் திகதிய கடிதம் மீதிகளை பதிவழிப்பதற்கான அனுமதியை கோரி அமைச்சிற்கு அனுப்பியிருந்தது.<br><br>இலங்கை விமானப் படை<br><br>சபை அனுமதி வழங்கப் பட்டிருக்காததுடன் கொடுப்பனவைக் கோரி SLAF இற்கு எழுத்து மூலம் வேண்டியிருந்தது. 2023/3/7 ஆந் திதிய கடிதம் மூலம் அறவீட்டில் தலையிடுவதற்கு அமைச்சிற்கு அறிவித்திருந்தது.</td>
<td></td>
</tr>
<tr>
<td>(ஆ) ரூபா 60,317,615 தொகையான இறங்குதுறை மற்றும் வாகனத் தரிப்பிட வியாபார கடன்பட்டோர் (உள்நாட்டு) 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. முகாமைத்துவ குழுவின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு சிறீலங்கன் எயார் லையன்ஸ் இடமிருந்து இறங்குதுறை மற்றும் வாகனத் தரிப்பிடம் மீதான வட்டி மாற்றங்களை பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.</td>
<td>பிரதான 1 ஆண்டிற்கு மேலான மீதிகள் பின்வரும் கடன்பட்டோரை கொண்டுள்ளது<br><br>
<table>
<tr><td>கடன்பட்டோர் பெயர்</td><td>1 ஆண்டிற்கு மேலான மீதி (ரூபா.)</td></tr>
<tr><td>வரையறுத்த லையன் எயார் (தனியார்)</td><td>44,908,978</td></tr>
<tr><td>இலங்கை விமானப் படை</td><td>7,348,031</td></tr>
<tr><td>வரையறுத்த ஏறோ லங்கா (தனியார்)</td><td>6,942,233</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>59,199,242</td></tr>
</table></td>
<td>நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுதல் சாத்திய தன்மை கம்பனியின் சட்டப் பிரிவு உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td>
</tr>
<tr>
<td>(இ) ரூபா 322,831,492 தொகையான வாடகை கடன்பட்டோர் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. முகாமைத்துவ குழுவின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு சிறீலங்கன் எயார் லையன்ஸ் இடமிருந்து வாடகை கடன்பட்டோர் மீதான வட்டி மாற்றங்களை பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது</td>
<td>சொல்லப்பட்ட திரண்ட வாடகையில் சிறீலங்கன் எயார் லையன்ஸ் இற்கு சொந்தமான தள்ளுபடி வட்டியான ரூபா 154,273,501.70 பிரதான நிலுவையாக இருக்கின்ற அதேநேரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சால் வழங்கப்பட்ட அனுமதி பிரகாரம் பதிவழிக்கப்பட வேண்டியிருந்தது. மேலும் AASL அதே சட்டமா அதிபார் நாயகத்திற்கு ரூபா 74,919,514 ஆன தொகையை தொடர்பு படுத்தியிருந்தது. மேலும், ரூபா 25,294,726.00 ஆன தொகை முனனரே சர்ச்சைக்குரியதாக இருந்ததுடன் பணிப்பாளர் சபையிடமிருந்தான தற்போதைய நெறிப்படுத்தலின் பிரகாரம்</td>
<td>நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுதல் சாத்திய தன்மை கம்பனியின் சட்டப் பிரிவு உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | தற்போது AASL அவற்றினை அறவிடுகின்ற நடைமுறை தொடங்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) ரூபா 375,633,848 தொகையான ஏறோ பிறிச் கடன்பட்டோர் 1 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் இருந்தது. முகாமைத்துவ குழுவின் பிரகாரம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு சிறீலங்கன் எயார் லையன்ஸ் இடமிருந்து ஏறோ பிறிச் கடன்பட்டோர் மீதான வட்டி மாற்றங்களை பதிவழிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது | பிரதான ஒரு ஆண்டிற்கு மேலான மீதிகள் பின்வரும் கடன்பட்டோர் ரூபா 347,577,561 தொகையான SLA ஐக் கொண்டுள்ளதுடன் அமைச்சு அனுமதி பிரகாரம் தள்ளுபடி வட்டியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கடன்பட்டோரை அறவிடுதல் சாத்திய தன்மை கம்பனியின் சட்டப் பிரிவு உதவியுடன் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சட்டப் பிரிவின் பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மேலதிக கொடுப்பனவாக கடன் பட்டோரிமிருந்து அறவிடப்பட்ட 03-06 மாதங்களிற்குள் ரூபா 48 மில்லியன், 06-12 மாதங்களிற்குள் ரூபா 13 மில்லியன் மற்றும் 1 ஆண்டிற்கு மேல் ரூபா 72 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 133 மில்லியன் தொகை உரிய கடன்பட்டோருக்கு திரும்ப செலுத்தாமல் அல்லது எதிராக சரிசெய்யாமல் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 90 நாட்களிற்கு மேலான வாடிக்கையாளர் மேலதிக கொடுப்பனவுகள் - தற்போது வாடிக்கையாளரால் செய்யப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் இருந்ததுடன் அந்த மீதிகள் வாடிக்கையாளர் அனுமதியுடன் எதிர்காலத்தில் வலைப்பட்டியலற்கு எதிராக சரி செய்யப்படும். | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற கடன்கொடுத்தோர் மீதிகளை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பின்னர் அந்த கடன்கொடுத்தோர் மீதிகளை தெளிவாககுவதற்கு தேவையான சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) கம்பனியானது பிடிகாசாக குறிப்பிட்ட தெகையொன்றை ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய ஒவ்வொரு கொடுப்பனவிலிருந்தும் நிறுத்தி வைக்க வேண்டியதுடன் நிறுத்திவைத்த மொத்த தொகை சார்பில் வேலைகளின் பூர்த்தியாக்கலில் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி காலாவதியாகும் வரை நிறுத்தி வைக்க வெண்டும். எவ்வாறாயினும், ரூபா 411 மில்லியன் தொகை ஒப்பந்தம் பூர்தியாக்கியும் 03 | ஒப்பந்தகாரரின் வேண்டுகையில் பிடிகாசு விடுவிக்கப்பட வேண்டியதுடன் குறைபாட்டு குறிப்புரை வேலைகள் பூர்தியாக்கிய பின்னர் கொடுப்னவை விடுவிப்பதற்கு செயற்திட்ட தலைவரின் பரிந்துரை பெற்றிருந்தது. இதன்படி, மேற்குறித்த தொகை குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி பூர்த்தியாகும் வரை இருந்தது. 2024.01.01 முதல் 2024.05.15 வரையான காலத்தின் போது ஒப்பந்தகாரருக்கு ரூபா 10,393,353 ஆன தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. வேண்டப்பட்ட அனுமதியுடன் 024 | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற பிடிகாசு மீதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் பின்னர் அந்த பிடிகாசு மீதிகளை நீக்குவதற்கு உயர் மட்ட அதிகாரிகளின் அனுமதியுடன் அவசியமன நடவடிக்கைகள் எடுகக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளிற்கு மேலாக ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. இது 3-4 ஆண்டுகளிற்குள் ரூபா 357.7 மில்லியன், 5-6 ஆண்டுகளிற்குள் ரூபா 19 மில்லியன் மற்றும் 7 ஆண்டுகளிற்கு மேலாக இருந்த ரூபா 33.7 மில்லியன் கொண்டிருந்தது. மேற்குறித்த கருத்துரைகளின் பிரகாரம், 2024 மே 15 இல் உள்ளவாறு பிடி காசு மீதி ரூபா 400.7 மில்லியனாக இருந்தது. | ஆம் ஆண்டின் போது வருமான கூற்றிற்கு 5 ஆண்டுகளிற்கு மேலாக பிடி காசினை திரும்ப பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | |
| (இ) | கொள்வனவு மீதான மீளளிக்க வேண்டிய வைப்புகள் ஒப்பந்தம் வழங்கிய பின்னர் மீளளிக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தம் வழங்கியதிலிருந்து 06 மாதங்களிற்கு மேலாக காலபப்குதி கடந்த பின்னரும் ஒப்பந்தகாரருக்கு ரூபா 23,294,120 ஆன தொகை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இது 06-12 மதங்களிற்குள் ரூபா 760,618, 1-2 மாதங்களிற்குள் ரூபா 950,500 மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேலாக இருந்த ரூபா 17,232,648 ஆள தொகைகளை கொண்டுள்ளது. | மீதான மீளளிக்க வேண்டிய வைப்புகள் கேள்வியாளரிடமிருந்து கோரிக்கை மற்றும் மூலப் பற்றுச்சீட்டு பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்டன. AASL கேள்வியாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கசல கோரிக்கைகளிற்கும் மீளளிப்பு செய்திருந்தது. AASL கோரிக்கையை சமரப்பிப்பதற்கு கேள்வியாளருக்கு அறவிக்கப்பட்ட போதிலும் சில கேள்வியாளர்கள் தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. எனவே அந்த வைப்புகள் AASl இல் இதுவரை இருக்கவில்லை. | நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற மீளளிக்க வேண்டிய வைப்பு மீதிகளை இனங்காண்பதற்கும் உயர்மட்ட அதிகாரிகளின் அனுமதியுடன் அந்த மீதிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.7.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழங்குநர் முற்பணங்கள் மற்றும் சகல கிளைத் தலைவர்களால் பெறப்பட்டிருந்த காசு முற்பணங்கள் உரிய ஆண்டு இறுதிக்கு முன்னர் தீர்ப்பனவு செய்ய வேண்டிய போதிலும் எவ்வாறாயினும் கம்பனியின் பல்வேறு பிரிவுகளால் ஆண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது பொருட் கொள்வனவுகளிற்காக பெறப்பட்டிருந்த ஆறு மாதங்களிற்கு மேல் இருந்த வழங்குநர் மற்றும் காசு முற்பணங்கள் முறையே ரூபா 66.5 மில்லியன் ரூபா 9.8 மில்லியன் கூட்டுத் தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிடைத்த விடயங்களிற்காக இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் உயர்ந்த விலைகள் என்பவற்றினால் சந்தையில் வேண்டப்பட்ட பொருட்கள் கிடைக்காமையால் கடந்த காலங்களில் முற்பண தீர்ப்பனவுகள் செய்ய முடியாதிருந்தது. உரிய கிளைத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் சகல நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்றவற்றை நீக்குவதற்கு தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | வழங்கல் மற்றும் காசு முற்பணங்கள் உரிய பிரிவுகளிலிருந்து மூலம் மற்றும் ஆதாரமான ஆவணங்கள் பெற்ற பின்னர் தாமதமில்லாமல் தெளிவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காசு முற்பணங்கள்<br>----------------------------------<br>2024.05.15 இல் உள்ளவாறான நிலுவையாக இருக்கின்ற ரூபா 9.8 மில்லியன் தொகையான காசு முற்பணங்களில் தற்போது 2024 நவம்பர் மற்றும் திசெம்பரில் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 957,800 உள்ளது. | |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2025 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3 ஆம் பிரிவு மற்றும் 2022 சனவரி 14 ஆந்திகதிய 01/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | i. அனுமதிக்கப்பட்ட பதவியில் இருந்த ஏனைய உத்தியோகத்தர்களிற்காக 115 லீற்றர் அல்லது கம்பனியின் மேற்குறித்த HM 1-1 வகுதியாக்கப்பட்டது. எவ்வாறாயினும் $S_{10}$ சம்பள மட்டத்தின் 130 உத்தியோகத் தர்களிற்காக சராசரி 130 லீற்றரும் S11 சம்பள மட்டத்தின் 206 உத்தியோகத் தர்களிற்காக 206 லீற்றரும் (மேற்குறத்த சம்பள மட்டங்கள் கம்பனியால் அனுமதிக்கப் பட்டிருந்தது) கம்பனியால் அனுமதிக்கப் பட்டிருந்தது. சுற்றறிக்கைக அறிவுறுத்தலிற்கு முரணாக மிகையாக மாதாந்த எரிபொருள் படியாக மீளாய்வாண்டின் போது 336 உத்தியோகத்தர்களிற்கு 235,865 லீற்றர்களிற்கு ரூபா 84 மில்லியன் வழங்கப் பட்டிருந்தது என கணக்காய்வு மாதிரிச் செவ்வையில் வெளிப்பட்டது. | இந்த விடயம் அதன் தன்மையை கருத்திற்கொள்வதுடன் AASL இன் குறித்த வியாபார வேண்டுகைள் பரீட்சிக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகு வதற்கோ அல்லது மேலதிக எரிபொருள் கொடுப்பனவிற்காக நிதி அமைச்சிடமிருந்து அனுமதி பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | ii. கம்பனியின் கிளைத் தலைவரிற்கான (முன்னாள் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் / பிரதம நிதி உத்தியோகத்தர்) மாதந்த எரிபொருள் எல்லை | AASL இன் தன்மை மற்றும் குறித்த வியாபார வேண்டுகையை கருத்திற்கொண்டு இந்த விடயம் விரிவான | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகு வதற்கோ அல்லது மேலதிக எரிபொருள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 135 லீற்றரிற்கு தகுதியுடைதாக உள்ளனர். எவ்வாறாயினும், 19 கிளைத் தலைவர்களிற்காக மாதம் ஒன்றிற்கு 136 லீற்றர் முதல் 373 லீற்றர் வரை கம்பனியால் அனுமதிக்கப் பட்டிருந்தது. கணக்காய்வு தெரிவு செவ்வையில் வெளிப்பட்டவாறு, சுற்றறிக்கை அறிவுறுத்தலிற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 3.6 மில்லியன் தொகையான 10,142 லீற்றர் எரிபொருள் மிகையாக வழங்கப்பட்டிருந்தது. | பரீட்சிப்பின் பின்னரே முகாமைத்துவம் தீர்மானம் எடுக்க வேண்டும். | கொடுப்பனவிற்காக நிதி அமைச்சிடமிருந்து அனுமதி பெறுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (கொள்வனவு நடைமுறைக்கான e-GP முறையை பயன்படுத்தல்) 2.6 ஆம் பந்தி | திட்டமிடப்பட்ட சகல கொள்வனவுகளும் PEs ஆல் படிப்படியாக முறைமை ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும். கொள்வனவு நடைமுறைகளின் கீழ் 2020 சனவரி 01 தொடக்கத்தில் PEs ஆல் படிப்படியாக முறைமை ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், கொள்வனவு நடைமுறைக்காக e-GP முறையை பயன்படுத்தல் கம்பனியால் இன்னமும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இதற்காக திறைசேரியின் ஒத்துழைப்பில் AASL ஆல் குழு நியமிக்கப்பட்டதுடன் திறைசேரியால் ஒழுங்கு செய்யப்பட்ட இரண்டு கூட்டங்களிற்காக AASL குழு பங்குபற்றியிருந்தது.<br><br>திறைசேரியானது விவாதிப்பதற்கு ERP ஐ பயன்படுத்துகின்ற அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகளிற்காக விசேட கூட்டத்தை ஒழுங்கு செய்வதற்கு உடன்பட்டிருந்ததுடன் இருக்கின்ற ERP முறைமைக்கு e-GP ஐ ஒன்றிணைத்து அமுலாக்குவதற்கான சாத்தியத்தை பார்த்தோம். | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01.∴2012 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகை மீதான வழிகாட்டல் | 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் CEO இன் நியமனங்களை பணிப்பாளர் சபை (BOD) உறுதிப்படுத்தியது. இருப்பினும் தலைவர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் (CEO) பணிகள் உரிய நியதி அல்லது AOA ஊடாக இணைக்கப்பட்டன, உரிய | AASL இன் AoA ஆல் இனங்காணப்பட்ட நிறைவெற்று பணிப்பாளர் பதவியை கருத்திற் கொள்ள வேண்டியதுடன் அதேபோல அரசுடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| பிரிவு 2.2.2(ஆ)V | டீழுனு கட்டாயமாக நியதி அல்லது AOA இற்கு திருத்தத்தின் ஊடாக இரண்டு பணிகளாக பிரிப்பதற்கு நடவக்கை தொடங்கப்பட்டது. இந்த பின்னனியின் அடிப்படையில் உயர் சம்பள மட்ட (S-14) செலுத்தல் கட்டமைப்பு CEO இற்காக ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், உயர் சம்பள மட்டம் (S-14) கிளைத் தலைவர்களிற்காக ஒதுக்கப்பட்டது. மேலும், CEO ஆனது இன்னமும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளுகை மீதான வழிகாட்டலில் குறிப்பிடப்பட்வாறு CEO பதவியும் உள்ளது. ஆகவே, CEO பதவியை அறிமுகப் படுத்தவதற்கு AoA ஐ திருத்துவதற்கு அவசியமிருக்கவில்லை. | |
| (ஈ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை - அரசுடமையாக்க்பபட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூல் | | | |
| (i) பிரிவு 3.2 (i) | கம்பனியானது சபை அனுமதி, பணிப்பாளர் நாயத்தின் அனுமதிக்காக உரிய அமைச்சின் பரிந்துரைகள், பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயத்தின் (DGNB) அல்லது பொருத்தமுடையதான தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் (DGNB) என்பவற்றின் பிரதிநிதியான முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (DGMS), என்பவற்றின் அனுமதியுடன் பதவியணி, ஆட்ரேப்புத் திட்டம் (SOR), செலுத்தல் கட்டமைப்பு மற்றும் படிகள் உள்ளடங்கலாக நிலவுகின்ற அவர்களுடைய பதவியணி நிலையை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறித்த வேண்டுகை கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்காக சபை அனுமதி எடுத்தலை தவிர கம்பனியால் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. பின்னர், செலுத்தல் கட்டமைப்பு மற்றும் படிகள் முழு SOR ஐ அனுமதிக்காமல் 2024 சனவரி | SORP இறுதியாக்கப் படுகின்து. HR மற்றும் வேதனங்கள் குழு சகல SORP களை மீளாய்வு செய்கின்றன. AASL இன் குறித்த வியாபார தேவைகளை கருத்திற் கொண்டு கிடைப்பனவு மற்றும் முறையான தகைமைகளின் வெண்டுகை என்பவற்றினை கருத்திற் கொண்டு சகல SORP களை கவனமாக மீளாய்வு செய்ய வேண்டப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01 ஆந் திகதிய PED\S\AASL\1\06(i) ஆம் இலக்க கடிதம் மூலம் நிதி, பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் அனுமதிக்கபபட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான ரூபா 213 மில்லியன் கூட்டுத் தொகையான 10 வித்தியாசமான படிகளிற்காக சபை அனுமதியை தவிர முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவிலலை. | | |
| (ii) பிரிவு 3.4 | கம்பனியானது வேலை விபரங்கள், கல்லித் தகைமைகள், அனுபவம் போன்றவற்றினை ஒருங்கிணைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களிற்காக முறையான திட்டங்கள் உள்ளதென உறுதிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், வேலை விபரங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு முறை கம்பனியால் பயன்படுத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கணக்காய்வாளாரால் வழங்கப்பட்ட கருத்துரைகளின் பிரகாரம் புதிதாக வரைவு SOR இல் மேற்குறித்த வேண்டுகைகள் நிரப்பப்பட்டிருந்தது. | இந்த பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட சகல பகுதிகளும் புதிய SORP படிவத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தது | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். . |
| (iii) பிரிவு 5.3 | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு திருப்திகரமான திரவத் தன்மையுள்ள திரண்ட நிதி / பங்குடமையாளர்களிற்கு வரிக்கு பின்னரான இலாபத்தின் குறைந்தது 30 சதவீத (30) விநியோகிக்கப்பட வெண்டும். கம்பனியானது 2023 ஆம் ஆண்டிறுதியிற்காக வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 28,121 மில்லியனை பதிவு செய்திருந்ததுடன் இதன்படி, ரூபா 8,436 மில்லியன் தொகை திரண்ட | சகல விமானநிலைய அபிவிருத்தி செயற் திட்டங்காகவும் காசுப் பாய்ச்சல் தேவையை கருத்திற்கொண்ட பின்னர் பொது திறைசேரியிடமிருந்தான வேண்டுகையின் அடிப்படையில் பங்கிலாபங்களை சபை அனுமதித்திருந்ததுடன் ஏற்கனவே ஆண்டு கொள்கைக்காக மூலதன மற்றும் செயற்பாட்டு பாதீடுகளை | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது ரூபா 5,000 மில்லியன் மாத்திரமே வழங்கியிருந்ததுடன் செலுத்த வெண்டிய ரூபா 3,346 மில்லியனிற்காக எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கவல்லை. மேலும், கம்பனியானது 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 4,802 மில்லியன் பதிவு செய்திருந்ததுடன் இதன்படி ரூபா 1,440 மில்லியன் தொகை வழங்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், கம்பனியானது திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,000 மில்லியன் மாத்திரமே வழங்கியிருந்தது. | அனுமதித்திருந்தது. | |
| (iv) பிரிவு மற்றும் 7.4 | 7.1 | சகல SOE களிலும் செயலாற்றல் மீளாய்வு கட்டாயமாக உள்ளதுடன் இது மாதிரி மற்றும் அந்த வசதகளின் தெளிவான பொறிமுறை என்பன தாபிக்கப்பட வேண்டும். செயலாற்றல் மீளாய்வின் தாபிப்பு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு தொடர்புபடுத்தப்பட்டதுடன் செயற்திட்டங்கள்/ ஒப்பந்தங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களின் மேலே குறிப்பிட்ட வேண்டுகைக்கு இணங்கி மாதாந்த சபை கூட்டங்களில் பரீட்சிப்பதற்கு முன்வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை மாதாந்த சபை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை இவற்றினைவிட காலாண்டில் நடைபெற்ற கூட்டங்களிற்கு முன்வைக்கப்பட்டது. | வழமைபோல தற்போதைய கண்டுபிடிப்பகளுடன் உடன்படுகின்றோம். நாங்கள் சபைக்கு காலாண்டு அடிப்படையில் சர்ப்பிக்கின்றொம், சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் நுகரும் நேரம் மாததந்தம் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது என தாக்கத்திற்குரிய பிரதேச மட்டத்தில் அவற்றினை நடாத்துகின்ற நிர்வாகத்தின் நோக்கம் இன்னமும் செயற்திட்டம் சரியான நேரத்தில் தகவல் பெறுவதற்கு ஆஜ முறைமை பொருத்தப்படாமையால் காலப்போக்கில் அவை செலவு மிக்கதாக இருக்கும் ERP கட்டம் 2 இன் கீழ் மாதிரி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்கியொழுகு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.9. காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்வருகை அனுமதி பத்திரம் வழங்குவதன் மூலம் சேகரிக்கப்டப்ட காசிலிருந்து விமான முகாதைத்துவ பிரிவால் ஏற்பட்ட காசு மோசடியை பிரதிநிதித்துப்படுத்துகின்றவை மாற்றப்படாத வைப்பாக வங்கி இணக்கக்கூற்றில் ரூபா 14.8 மில்லியன் தொகை காட்டப்பட்டது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்த தொகை இன்னமும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ கருத்துரைகளின் பிரகாரம், வழக்கு இன்னமும் புலனாய்வில் உள்ளதுடன் மோசடி மீதான நீதி மன்ற வழக்கு செயற்பாட்டில் உள்ளன. | புலனாய்வு மற்றும் நீதி மன்ற வழக்கு செயற்பாட்டில் உள்ளதனால் பதிவேடுகள் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க்படவில்லை. மேலும், மோசடி தொடர்பான வங்கி இணக்கக்கூற்று கணக்கு இல 406 இல் மாற்றப்படாத வைப்புக்களின் கீழ் ரூபா 14.8 மில்லியன் இருக்கின்ற போது அதே உத்தியோகத்தர் BOC 406 வங்கி கணக்கில் ரூபா 6.6 மில்லியன் வைப்பு செய்திருந்தார் இதன்படி, தேறிய விடுவிக்கப்படாத தொகை ரூபா 8.2 மில்லியன் உள்ளது. எவ்வாறாயினும், நீதி மன்ற தீர்ப்பு பெறுவதற்கு முன்னர் பதியவேண்டிற்கு ஏதாவது சீராக்கல் தேவைப்படுமாயின் பணிப்பாளர் சபியிடமிருந்து ஆலோசனை பெறப்படவேண்டும். | காசு மேசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நீதி மன்ற வழக்கு இறுதியாக்கலின் பின்னர் தேவையான சீராக்கல் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2022 நவம்பர் 09 முதல் 2023 திசெம்பர் 3 வரையான காலத்திற்காக நேரடியாக வங்கி கணக்கிற்கு வைப்பு செய்யப்பட்ட ரூபா 6,877,838 ஆன தொகை 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு வங்கி கணக்கிணக்கக்கூற்றின் ஆதார ஆவணங்கள் இல்லாத செலவு/ வங்கி செலவு'' ஆக கருதப்பட்டிருந்தது. | 2024.'.04.'.30 இல் உள்ளவாறு கணக்குகளில் இருக்கின்ற ரூபா 81,880 ஆதார ஆவணங்கள் இல்லாத செலவு மீதிக்கு ஏற்கனவே வங்கியிடமிருந்து விபரங்கள் வேண்டப்படடிருந்தது. விபரங்கள் எதுவும் பெற்பட்டிருக்காதுவிடின் அவற்றினை இலாப நட்ட கணக்கிற்கு திரும்ப எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய பிரிவுகளின் உதவியுடன் செலவு மீதிகளை இனங் காண்பதற்கும் கணக் கேடுகளில் சீராக்கல் செய்வத்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.10 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2027 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பிரிவின் பிரகாரம் வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக வியாபாரத்தில் இருந்தான வருமன கணப்பீடு மூலதன தன்மை | இது 2011 இலிருந்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் (IRD) முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது. AASL ஆல் வாடகைக்கு | வருமான வரி கணிப்பிடும் போது திறைசேரிக்கு செய்யப்பட்ட கடன் மீள் செலுத்தல்களை கழிப்பதற்கு ERD இடமிருந்து முறையான அனுமதி எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினத்திற்காக கழிப்பனவு எதுவும் ஒதுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வியாபாரத்தில் இருந்தான மதிப்பிடக்கூடிய வருமன கணப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் போது கடன் திருப்பிச் செலுத்தல்களிற்காக கம்பனியால் பொது திறைசேரிக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,475 மில்லியன் தொகை ERD இடமிருந்து முறையான அனுமதி பெறப்படாமல் கழிக்கப் பட்டிருந்ததுடன் இந்த சீராக்கல்கள் 2011 இலிருந்து நடைமுறையிலுள்ளது. இதன் விளைவால், 2022/23 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி ரூபா 442.5 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அமர்த்தப்பட்ட தற்போதைய வரி ஆலோசனையாளர் உள்ளடங்கலாக சகல வரி ஆலோசனையாளர்களும் அத்தகையவாறு எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. | |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமை கூற்றில் பிடித்து வைத்தல் வரி, செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் தேசத்தை கட்டியொழுப்புதல் வரி தொடர்பில் 2013/2014 முதல் 2021/2022 வரையான வரி மதிப்பீட்டு ஆண்டுகளிலிருந்து பெறவேண்டிய வருமான வரியாக ரூபா 823.2 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இடைக்கால கணக்காய்வு அறிக்ழகயின் பிரகாரம் ரூபா 571.6 மில்லியனில் ரூபா 321.4 மில்லியன் தொகை 2023 சனவரி 09 ஆந் திகதிய அதன் கூற்றில் விரிவான கணக்காய்விற்கு உட்படுத்த செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, ரூபா 250 மில்லியன் தொகையான அறவிடவேண்டிய வருமான வரியின் இனங்காணல் முக்கியமற்றதாக உள்ளது. | IRD மீளளிப்பு அறிவித்தல் வழங்கியிருந்த போதிலும், இன்னமும் இந்த தொகை இறுதயாக்கப்பட்டிருக்காததுடன் தற்பொது IRD இன் செயல்தவறு பிரிவு இந்த மீளளிப்பிற்கு எதிராக வரித் தவறுகளை பரிசோதிக்கின்றதுடன் 2023 நவம்பர் 22 இல் அவை ரூபா 603.8 மில்லியன் எங்களுடைய செயல்தவறு என அறிவித்திருந்தது. அதே திகதியில் AASL இடமிருந்து எவ்வித தவறுகளும் இல்லையென நாங்கள் அறிவித்திருந்தோம் ஆனால் முன்னைய ஆண்டு வரி அறிக்கைகள் குறிக்கின்றது. 2024 மே 07 இல் அவர்களுடைய முறைமை தறவறினை தெளிவாக்குவதற்கும் மீளளிப்பு நிதியை விடுவிப்பதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்கத்திற்கு நாங்கள் திரும்பவும் வேண்டியிருந்தோம்.<br><br>அவர்களுடைய பதில்களின் மீது பதிவுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | அறவிட வெண்டிய வரிக்கான உறுதிப்படுத்தல்கள் நுசுனு இடமிருந்து கோரப்பட வேண்டியதுடன் உறுதிப்படுத்தப் பட்டிருக்காவிடின் இதன்ப கணக்குகள் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2013 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய CMN/13/1254/545/011-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முதலீட்டு சபையின் (BOI) கீழ் உபாய அபிவிருத்தி செயற்திட்டமாக அனுமதிப்பதற்கு மாத்தளையில் MRO தொடர்பான இந்த மேலதிக ஒபபந்த வேலைகள் பட்டியலிற்கு ஆதவையான நடவடிக்கை தொடங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்ததுடன் மற்றும் வரி செலுத்துவதற்கான ஒப்பந்தகாரர் விலக்கழிப்பதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் அதிகாரம் உள்ளது. மேலும், நிதி மற்றும் திட்டமிடல் அமைசசால் அவருடைய அவதானிப்புகளின் கீழ் அவற்றினை விதந்துரைத்தது. இருப்பினும், வரி விலக்கழிப்பதற்கு 2008 இன் 14 ஆம் இலக்க உபாய அபிவிருத்தி செயற்திட்ட அதிகாரச்சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் பிரகாரம் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே, வரி விலக்கழிப்பு பெறுவதற்கு சாத்தியம் இருந்த போதிலும் 2023 யூலை 28 இல் ஐ.அ.டொலர் 247,556 இற்கு சமமான ரூபா 79,386,492 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உபாய அபிவிருத்தி செயற்திட்டமாக அனுமதிக்கப்பட்ட MRO செயற்திட்டத்தை பட்டியல்படுத்த அவசியமான நடவடிக்கை தொடங்குவதற்கு அமைச்சரவை அனுமதித்திருந்த போதிலும் இந்த செயற்திட்டம் சீனா எக்சீம் வங்கியிடமிருந்து நிதிகள் பெற்றிருக்காமையால் குறைநிரப்பு உடன்படிக்கை செயற்பாட்டில் இல்லாமையால் தொடரமுடியாதிருந்தது. எனவே, செயற்திட்டம் SDP ஆக வெளியிடப்பட்டிருக்காததுடன் இதன்படி வரி விலக்கழிப்பகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அமைசரவை தீர்மானத்தின் வேண்டுகை கம்பனிக்கு ஆகக்கூடிய நலன் பெறுவதற்கு எதிர் கால்த்தில் தாமதம் இல்லிமல் நிறைவேற்ற வேண்டும். |
| (ஈ) | கம்பனயின் தலைவர் MRO கொடுப்பனவுகள் தொடர்பில் எந்திரவியல் பொறியியலாளரால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் பற்றி 2023 யூலை 18 ஆந் திகதிய கடிதம் மூலம் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.<br>தீயணைப்பு வலையமைப்பின் சகல கசிவுகள் மற்றும் ஒரு ஆண்டிற்கு மேலாக ஏற்றுக் கொள்ளகூடிய ஆகக்குறைந்த கசிவுகளுடன் செயற்படல் என்பவற்றினை CHEC திருத்தியிருக்குமாயின் VAT | முன்னரே குறிப்பிடப்பட்டவாறு, MRO செயற்திட்டம் SDP ஆக வர்த்தமானி வெளியிடப் பட்டிருக்கவில்லை. பாராளுமன்றத்தின் அனுமதி இல்லாமல் செயற்திட்டம் வர்த்தமானி வெளியிடப் பட்டிருக்குமாயினே VAT விலக்களிப்பு உள்ளதென IRD ஆணையாளர் அறிவித்திருந்தார்.<br><br>VAT கொடுப்பனவு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறற பின்னர் 2023 யூலை 28 இல் செய்யப்பட்டது. மேலும் | விடய பொறியியலாளரால் செய்யப்பட்ட பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன் கொடுப்பனவு செய்யப்பட்ட போது நிறைவேற்றப்பட்டது. |

| | |
|---|---|
| கொடுப்பனவுகள் பரிந்துரைக்க முடியும். மேற்குறிப்பிட்ட வேண்டுகை செய்ய முடியாதிருக்குமாயின் முழு தீயணைப்பு வலையமைப்பும் CHEC ஆல் மீள பொருத்தப்பட வேண்டும். அண்ணளவாக ரூபா 800 மில்லியன் கிரயமாக இருக்கும்.<br><br>எவ்வாறாயினும் கம்பனியானது மேற்குறித்த பரிந்துரைகளை கருத்திற்கொள்ளாமல் 2023 யூலை 28 இல் ரூபா 79,386,492 ஆன VAT கொடுப்பனவை விடுவித்திருந்தது. | AASL அறவிட வேண்டிய VAT ஆக செய்யப்பட்ட VAT கொடுப்பனவின் 75 % அறவிடக் கூடியதாக இருந்தது. விலைப் பட்டியல் கொடுப்பனவுடன் சேர்த்து VAT செலுத்த வேண்டுமெனவும் அறிவிக்கப்பட வேண்டும் எனவே, VAT கொடுப்பனவை மேலும் தாமதப்படுத்துவால் IRD ஆல் தண்டப்பணம் விதிக்க வேண்டி ஏற்படுவதுடன் AASL அதனை அறவடுவதற்கு இயலாதிருக்கும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,121,654,931 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,802,697597 ஆக இருந்தது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 23,318,957,334 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 10,799,030,179 ஆல் அதாவது 39 சதவீதம் அதிகரித்தமை, நிதி வருமானம் ரூபா 4,221,524,305 ஆல் அல்லது 68 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 20,526,682,570 ஆல் அதாவது 331 சதவீதம் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| விபரம் | 2023 (ரூபா) | 2022 (ரூபா) | வேறுபாடு (ரூபா) | வேறுபாட்டின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| **வருமானம்** | **38,375,829,636** | **27,576,799,457** | **10,799,030,179** | **39** |
| விமான பயணம் தொடர்பான வருமானம் | 7,575,143,036 | 6,135,995,731 | 1,439,147,305 | 23 |
| விமான பயணம் அல்லாத வருமானம் | 30,670,641,452 | 19,800,402,953 | 10,870,238,499 | 55 |
| ஏனைய வருமானம் | 130,045,148 | 1,640,400,773 | (1,510,355,625) | (92) |
| நிதி வருமானம் | 10,428,195,594 | 6,206,671,289 | 4,221,524,305 | 68 |
| **நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள்** | **19,061,158,765** | **14,941,498,625** | **4,119,660,140** | **28** |

| | | | | |
|---|---|---|---|---|
| பதவியணியினர் கிரயம் | 7,467,364,871 | 7,424,239,181 | 43,125,690 | 1 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 1,880,496,451 | 475,950,365 | 1,404,546,086 | 295 |
| **நிதிக் கிரயம்** | **14,324,407,728** | **(6,202,274,842)** | **20,526,682,570** | **331** |
| **நாணயமாற்று இலாபம்/ (நட்டம்) (கடன்கள் மீது)** | 15,204,613,135 | (43,977,059,211) | 59,181,672,346 | 13457 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விமான பயணம் அல்லாத வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே 55 மற்றும் 68 சதவீதத்தால் அதிகரித்துள்ளன.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது திருத்த மற்றம் பராமரிப்பு கிரயம் 295 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நாணயமாற்று இலாபம்/ (நட்டம்) 13457 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. (வெளிநாட்டு பணத்திற்கு எதிராக இலங்கை ரூபா குறைவடைந்தமை காரணமாகும்.)

## 2.3 விகித பகுப்பாய்வு

| **விகிதத்தின் வகை** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.31 | 4.23 | 5.98 | 7.68 | 7.23 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 3.2 | 4.1 | 5.88 | 7.55 | 7.1 |
| புரள்வு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை | 1.39 | 2.44 | 1.66 | 1.38 | 1.38 |
| தேறிய இலாப / (நட்ட) விகிதம் % | 73 | 17 | -26 | -31 | 43 |
| பங்கொன்றிற்கான அடிப்படை (நட்டம்) / உழைப்பு (ரூபா) | 140,606 | 24,013 | -10,417 | -12,522 | 54,979 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | 15 | 3 | -2 | -2 | 10 |
| பிரயாணி ஒருவரிற்கான வருமானம் (ரூபா) | 5,083 | 5,024 | 5,234 | 3,373 | 2,580 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் படிப்படியாக குறைவடைந்திருந்தது. கடன்களின் நடைமுறைப் பொறுப்பு ரூபா 6,678 மில்லியனால் அதிகரித்ததுடன் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை ரூபா 2,451 மில்லியன் அதிகரித்திருந்ததுடன் செலுத்த வேண்டியவை வருமான வரி ரூபா 2,024 மில்லியனால் அதிகரித்தமை என்பன நடைமுறை விகிதம் மற்றும் விரைவு சொத்து விகிதம் என்பன குறைவடைந்தமைக்கு பங்களித்தமை முக்கிய காரணங்களாகும்.

(ஆ) பங்கொன்றிற்கான உழைப்பு மீளாய்வாண்டின் போது 485 சதவீதத்தால் இலாபத்தை அதிகரித்தமை ஆண்டில் 486 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

(இ) மீளாய்வாண்டின் போது புரள்வு விகிதம் 1.05 (தடவைகள்) ஆல் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளின் (KPIs) பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| **முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 46,639 | 37,641 | 21,204 | 20,881 | 62,195 |
| மொத்தப் பயணிகள் அசைவின் எண்ணிக்கை | 7,548,646 | 5,503,198 | 1,505,479 | 2,375,056 | 9,958,688 |
| விமான சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொண்) | 158,911 | 173,597 | 200,179 | 150,075 | 259,089 |
| மேலே பறக்கும் அசைவுகள் (எண்ணிக்கை) | 35,506 | 23,846 | 9,339 | 16,370 | 45,674 |
| கையாளப்பட்ட விமானம் ஒன்றிற்கான மொத்தக் கிரயம் (ரூபா.'000) | 325 | 727 | 574 | 738 | 235 |

சர்வதேச விமான பறத்தல்களின் எண்ணிக்கை, மொத்த பயணிகள் நகர்வுகளின் எண்ணிக்கை மற்றும் மேலே பயற்த விமானங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்திருந்த அதேநேரம், பொதி நகர்வுகளின் எண்குறைவடைந்திருந்தது. எவ்வாறாயனும், விமான கையாளல் ஒன்றிற்கான மொத்த கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது. .

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்ட காலப்பகுதியின் போது பயணிகள் வருகை கட்டிடம் III நிர்மாணம் மற்றும் இணைந்த வேலைகளிற்காக ஏற்பட்ட ரூபா 184 மில்லியன் தொகையான கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினம் சிக்கனமற்றதாக இருந்தது. | இந்த செயற்திட்டம் இலங்கை அரசாங்கத்தின் இடைக்கால கடன் கொள்கை பிரச்சனைகளுடன் JICA தடைசெய்ய கைதவிர்ப்புகளால் இடை நிறுத்த வேண்டியிருந்தது. கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் செயற்திட்டம் தொடர்பான செலவினம் செயற்திட்ட இடைநிறுத்தலுடன் இலாப நட்டத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | முறையான செயல் நடவடிக்கை திட்டத்தை அறிமுகப்படுத்தவதற்கும் தேவையற்ற நடவடிக்கைகளை குறைப்பதற்கும் பணப் பெறுமதியை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| MRO செயற்திட்டத்திற்காக 2016 இல் விலை பட்டியலின் தேவை முன்வைக்கப்பட்ட போதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விலைப்பட்டியல் கொடுப்பனவு செயற்படுத்தப்பட்டிருந்தது. விலைப்பட்டியல் செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொர் 1 ஆனது இ.ரூபா 146.06 இலிருந்து தீர்ப்பனவு செய்யும் நேரத்தில் ஐ.அ.டொலர் 1 ஆனது இ.ரூபா 360 வரை நாணயமாற்று அதிகரித்திருந்தது. ஆகவே, கம்பனியானது ரூபா 324.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2016 இல் விலை பட்டியல் அனுப்பபட்டிருந்த போதிலும் விலை பட்டியல் அனுமதிப்பதற்கோ அல்லது உடன்பட்டோ இருக்கவில்லை. CHEC உடன் பல பேரம்பேசல்களின் பின்னர் உடன்பட்ட கொடுப்பனவு திட்டத்துடன் 2022 இலேயே பட்டியல் செலுத்தவதற்கு அவசியமான அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தது. | அந்நேரம் செலுத்த வேண்டியவற்றில் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவை செய்வதன் மூலம் தேவையற்ற நாணயமாற்று நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ திறமையீனங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,104.8 மில்லியன் தொகையான (முற்கொண்டு செல்லும் பெறுமதி) PPE இன் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு கணிப்பீட்டுச் சபை குழு நியமிக்கப்பட்டிருந்தது. இது ரூபா 3,210.4 மில்லியன் அசையக்கூடிய சொத்து (முற்கொண்டு செல்லும் பெறுமதி) மற்றும் ரூபா 36,894.4 மில்லியன் தொகையான (முற்கொண்டு செல்லும் பெறுமதி) அசையாத சொத்துக்கள் என்பவற்றினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், 2024 மே 06 இல் உள்ளவாறு குழுவால் ரூபா 38.8 மில்லியன் தொகையான அசையாத சொத்துக்கள் மாத்திரம் (முற்கொண்டு செல்லும் பெறுமதி) பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சகல அசையாத மற்றும் அசையும் சொத்துக்களும் மெய்மையாய்வு செய்யப்பட்டன. ஆகவே, அசையாத சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. இவற்றினை விட அசையாத சொத்தக்கள் பல இடங்களில் இருக்கின்றன. | சகல சொத்துக்களின் பௌதீக உள்ள தன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு வருடாந்த கணிப்பீட்டு சபை மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) **வரியற்ற கடைகளிலிருந்தான வருமானம்**

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டிற்காக (கோவிட் 19 காலத்திற்கு முன்னர்) வெளிறேகை மற்றும் உள்வருகை பயணிகளின் சராசரி நகர்வு 830,222 ஆக இருந்தது. அந்த நேரத்தில் வாடகை கட்டணங்கள் உடன்படிக்கை நிபந்தனைகளை பிரயோகித்து (அது 100 % ஆக இருந்தது) கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கோவிட் 19 காலத்தின் பொது வாடகை சாட்டுதல் செய்யப் பட்டிருக்கவில்லை. பின்னர் மொத்த பயணிகள் நடமாட்டம் படிப்படியாக அதிகரித்திருந்தது. பயணிகள் நடமாட்டம் அதிகரித்திருந்ததுடன் கம்பனி 2021 மார்ச் மாதத்திலிருந்து உடன்பட்ட வாடகை கட்டண சதவீதமாக வாடகை வருமானம் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட அந்த வாடகை கட்டணங்கள் பயணிகள் நடமாட்டம் மீட்டெடுப்பின் சதவீதத்துடன் பொருந்தி யிருக்கவில்லை. வாடகை வருமானம் சேகரிப்பதில் பயணிகள் நடமாட்டம் சரியான அறவீட்டு சதவீதம் பிரயோகிக் காமையால் கம்பனியானது வரியல்லாத கடைகளிற்காக ஐ.அ.டொலர் 460,803 ஆன வாடகை வருமானத்தை இழந்திருந்தது.

2016 ஆம் ஆண்டில் வரியல்லா கடை செயற்பாடட்டாளரின் பிரதான வகுதி ஆண்டிற்கு ஆண்டு 06 சதவீத வளர்ச்சியுடன் (YoY) அந்நேரத்தில் கட்டிடத்தின் கேள்வி ஆவணத்தில் அடிப்படையில் AASL ஆல் வழங்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட பயணிகளின் அடிப்படையில் அவர்களுடைய கேள்வி சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் காரணமாக நாட்டில் கோவிட் 19 நோய் தொற்று மற்றும் பொருளாதார சீர்கேடு காரணமாக பயணிகள் நெரிசல் மாற்று வழியாக BIA இல் சரிந்திருக்காததுடன் இதன் விளைவால் செயற்பாட்டாளரின் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களின் பகுதி சொல்லப்பட்ட 5 ஆண்டு காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட மொத்த பயணிகள் எதிர்வுகூறலுடன் ஒப்பிடப்பட்டு ஒப்பந்த காலப்பகுதி ஆரம்ப ஐந்து (5) ஆண்டுகளிற்காக அடையப்பட்டிருக்காததுடன் அந் நேரம் பயணிகள் நடமாட்டம் 62 சதவீமாக மாத்திரமே பதிவு செய்திருந்தது.

தரவு பகுப்பாய்வு அறிக்கை சரியான தீர்மானங்களை பெறுவதற்கு BOD இற்கு முன்வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ii). 2022 மே மாதத்திலிருந்து 2023 மார்ச் வரை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட வாடகை கட்டணங்களில் 70 சதவீதம் சாட்டுதல் செய்யப்பட்டது. அந்நேரத்தில், மாதாந்த பயணிகள் நகர்வு 413,418 முதல் 582,367 வரையான வீச்சில் இருந்தது. பின்னர் மாதாந்த பயணிகள் நகர்வு 582,654 முதல் 684,452 வரையான வீச்சில் அதிகரித்திருந்த போதிலும் 2023 ஏப்ரல் மாதத்திலிருந்து வாடகை கட்டண வீதம் 60 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. ஆகவே, வாடகை வருமானம் 10 சதவீதம் வீழ்ச்சியடைந்தமையால் கம்பனியானது ஐ.அ.டொலர் 91,445 ஐ இழந்தது. | கோவிட் நோய் தொற்றின் பின்னர் AASL 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பயணிகள் கால்பந்து ஆட்ட அடிப்படையில் கம்பனியால் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தில் மாதாந்த வாடகையை சாட்டுதல் செய்ய தொடங்கியது. எவ்வாறாயினும், 2022 சனவரி முதல் 2023 ஆகஸ்ட் வரையான காலத்தின் போது AASL மேலதியமாகவும் குறைவாகவும் இரண்டும் சாட்டுதல் செய்யப்பட்டிருந்த என அவதானிக்கப்பட்டது, அதேநேரம் சொல்லப்பட்ட காலத்தின் போது மேற்குறிப்பிட்ட அறிக்கையில் நட்டங்களாக AASL ஆனது செயற்படுத்துனரிடமிருந்து ஐ.அ.டொலர் 553,270 மேலதிகமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 460,803 குறைவாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. இதன்படி, AASL இன் இரண்டு செயற்படுத்துனரும் மேலதிக கட்டணங்கள் மூலம் நட்டத்திற்கு பதிலாக ஐ.அ.டொலர் 92,467 இலாபத்தை உழைத்திருந்தது என சான்று உள்ளது. | தரவு பகுப்பாய்வு அறிக்கை சரியான தீர்மானங்களை பெறுவதற்கு BOD இற்கு முன்வைக்கப்பட வேண்டும். |
| (iii). உடன்படிக்கையின் 3.15 ஆம் உட்பிரிவின் பிரகாரம் உரிமையாளர்கள் உடமை யாக்கப்பட்ட இடத்தில்/ விமான நிலையத்தில் இலங்கை சுங்கத்தால் சான்றுபடுத்திய ஆவணங்களை கம்பனியால் சர்ப்பிக்க வேண்டும். உரிமையாளர்கள் கம்பனியானது மேற்கொள்வதற்கு தேவைப்பட்ட போதிலும் அத்தகைய ஆவணங்களின் அடிப்படையில் இணக்கம் செய்வதற்காக கம்பனியை அனுமதித்து உதவிபுரிந்தது. எவ்வாறாயினும் மேற்குறித்த வேண்டுகை கம்பனியால் நிறை வேற்றப்பட்டதா இல்லையா என மதிப்பிடுவதற்கு ஆவணச் சான்றுகளை கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றோம், கிடைத்த ஏற்பாடுகளின் பிரகாரம் வரியல்லா கடை செயற்பாட்டாளரின் இருக்கின்ற உடன்படிக்கையில் உள்ளன. எவ்வாறாயினும், பொதுவான பத்திரம், பின்னூட்டல் மற்த்திரம் மற்றும் கடைகள் என்பவற்றிற்குள் பொருளிருப்புகளின் நகர்வுகள் உள்ளடங்கலாக மொத்த உடமையாக்கப்பட்ட காட்சியறை செயற்பாடு இலங்கை சுங்கத்தின் உடமையாக்கபபட்ட பிரிவின் நெறிப்படுத்தல் மேற்பார்வை மற்றும் பின்தொடர்வு என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.<br>இலங்கை சுங்கத்துடன் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப் பட்டதுடன் அந்த சொல்லப்பட்ட நடைமுறைகள் அவற்றின் மூலம் உயர் பாதுகாப்பு பகுதியில் மேற்கொள்ளப் படுகின்றதென உடன்பட்டது.<br><br>கசிவுகளிற்கான சாத்திய தன்மை நீக்கப்பட்டதென உறுதிப் | உடன்படிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டுமென வேண்டப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | படுத்தப்பட்டது. ஆகவே, AASL இற்கும் உரிமை பெற்றவற்களிற்கு இடையிலான கைச்சாத்திடப்பட்ட எதிர்கால உடன்படிக்கைகளில் உரிய உடப்பிரிவு (3.150 திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (iv). உடன்படிக்கையின் 3.17 ஆம் உட்பிரிவின் பிரகாரம், உரிமையாளர்களின் நிதியாண்டு இறுதியிலிருந்து மூன்று மாதங்களிற்குள் மாதாந்த தடங்கலுடன் கணக்காய்வு செய்யப்பட்ட விற்பனை சுழற்சி கூற்று உரியையாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் கணக்காய்வு செய்யப்பட்ட விற்பனை சுழற்சிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், சகல வரியல்லா கடை செயற்பாட்டாளர்களும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மூன்று மாதங்களிற்குள் விற்பனைச் சுழற்சி தொகைகளிற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டது/ நினைவூட்டப்பட்டது. | உடன்படிக்கை வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டுமென வேண்டப்பட்டது. |
| (இ) 52 ஏக்கரில் தலங்காம, அக்குரக்கொடாவில் அமைந்திருந்த உயர் அலைவரிசை பரிமாற்ற நிலையம் அகற்றுவதின் நோக்கத்திற்காக இன்னொரு பொருத்தமான இடத்தில் இது மாற்றப்பட்டது கம்பனிக்கு சீதா எலியா காட்டு ஒதுக்க பகுதியில் 0.9431 ஹெட்டெயர் பரப்பளவுள்ள காணி வழங்கப்பட்டது. மேலும், கந்தப்பொல வரவேற்பு நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த இன்னொரு காணி அலுவலக கட்டிடம் நிர்மாணித்தல், களஞ்சிய வசதிகள் மற்றும் உத்தியோகத்தர் வதிவிடம் என்பவற்றிற்காக கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது, காணயின் உரித்துறுதியை பெறுவதற்கு அல்லது திட்டமிடப்பட்ட நிர்மாணத்தை தொடங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இந்த செயற்திட்டம் கோவிட் 19 நோய் தொற்று காரணமாக நிதிச் சிக்கல்களுடன் பிடித்து வைக்கப்பட்டுள்ளது. | காணியின் உரிதுறுதியை பெறுவதற்கும் திட்டமிடப்பட்ட நிர்மாண வெலைகள் தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) மாத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான விலையத்தின் செயலாற்றல் (MRIA)** மீளாய்வாண்டில் MRIA இன் செயற்பாட்டுக் கிரயம் ரூபா 2,412.9 மில்லியனாக பதிவு செய்திருந்ததுடன் ரூபா 288 மில்லியன் செயற்பாட்டு வருமானம் 08 தடவைகளிற்கு மேல் | தற்போது அரசாங்கம் மீள்கட்டமைக்கப்படுகின்ற நடைமுறை செயற்பாட்டில் உள்ளது. RFP ஆனது MRIA இற்காக | மாத்தளை ராஜபகஷ சர்வதேச விமான நிலையம் திட்டமிட்டவாறு வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமான |

இருந்தது. மேலும், விமான நிலையத்தின் செயற்பாட்டு நட்டம் ரூபா 2,124.1 ில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான தேறி விக்கு பின்ரான இலாபம் பிரதானமான வெளிநாட்டு நாணயமாற்று இலாபத்தின் தாக்கம் காரணமாக ரூபா 926.6 மில்லியனாக இருந்தது. 2018 முதல் 2023 வரையான வரிக்கு பின்னரான திரண்ட தேறிய நட்டம் ரூபா 38,489 மில்லியனாக இருந்தது. மாத்தளை விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகள் இயலளவு 190,750 மாத்திரமாக இருந்ததுடன் கடந்த ஆறு ஆண்டுகளில் விமான நகர்வுகளின் மொத்த எண்ணிக்கை 2,182 ஆக இருந்தது. எனவே, விலை வேறுபாடு மற்றும் முரண்கட்டளை உள்ளடங்கலாக விமான நிலையத்தின் நிர்மாணத்திற்காக ஏற்பட்ட ஐ.அ.டொலர் 247.7 மில்லியனிற்கு சமமான ரூபா 36,564 மில்லியன் மொத்த தொகை வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை. மேலும், மேற்குறித்த நிர்மாணத்திற்காக ஆரம்பத்தில் பெறப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 190 மில்லியன் வெளிநாட்டு கடனிற்காக வருடாந்தம் கடன் வட்டியாக AASL ஆல் ரூபா 1,590 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

அழைக்கப்பட்டதுடன் அமைச்சரவை 30 ஆண்டு காலம் இந்தியன் மற்றும் இரசியன் ஒன்றிணைந்த கம்பனிக்கு முகாமைத்துவத்தை கையளிப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது. விடாமுயற்சி காரணமாக இன்னமும் தொடங்குவதற்கு உள்ளடுதன் வரைவு உடன்படிக்கை செயற்பாட்டில் உள்ளது.

வழியிலும் இலாபத் தன்மையுடனும் செயற்படுத்தவதற்கும் தரமுயர்த்தவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) **கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் செயலாற்றல (CIAR) – இரத்மலனை**

2018 முதல் 2023 வரை CIAR இரத்மலானையின் திரண்ட நட்டம் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 38.7 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 2,608 மில்லியனாக இருந்தது. 2020 முதல் 2023 வரையான காலத்தின் போது விமான பறத்தல்கள் முறையே 13, 13, 38 மற்றும் 86 அக இருந்ததுடன் 2020 முதல் 2023 வரையாக காலத்தின் போது பயணிகள் வருகை முறையே 60, 28, 54 மற்றும் 12 ஆக இருந்தது. .

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், CIAR இன் செலவிற்கு அப்பகுதி கட்டுப்பாட்டு நிலையத்தின் செலவினம் (மேலே பறத்தலை கண்காணிக்கின்ற இடம் கருத்திற் கொள்ளக்கூடிய வருமானத்தை உருவாக்குகின்றது) மற்றும் அப்பகுதி கட்டுப்பாட்டு நிலையத்தின் வருமானம் திரட்டிய வருமானதிற்குள் எடுக்கப்பட்டிருந்தது. யுயுளுடு பிரச்சனைகளை அடையாளம் கண்டதுடன் CIAR இன் கீழ் விமான பறத்தல் வருமானத்தை அதே செயற்பாடுகளின் கீழான செலவினத்திற்கு எதிராக பதிவதற்கும் சபை அனுமதி அடிபபடையில்

வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமான வழியிலும் இலாபத் தன்மையுடனும் இரத்மலானை சர்வதேச விமான நிலையம் செயற்படுத்தவதற்கும் தரமுயர்த்தவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| | 2023 தொடக்கத்திலிருந்து சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் CIAR உள்நாட்டு மற்றும் பயிற்சி விமான பறத்தல்களிற்கு முன்னுரிமை வழங்குகின்ற அடிப்படையான பிராந்திய விமான நிலையமாக செயற்படுகின்றது. ஆகவே, விமான நிலை செயலாற்றல் உள்நாட்டு மற்றும் பயிற்சி விமான பறத்தல்கள் அடிப்படையில் இருப்பதுடன் சர்வதேச விமான பறத்தல்களிற்கு சரியாக இருக்காது. | |
| (இ) **யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் செயலாற்றல (JIA)** | | |
| (i). 2029 ஒக்தோபர் 17 இல் JIA தொடங்கபபட்டது. எவ்வாறாயினும், விமான நிலையம் தொடங்கியதில் இருந்து 33,431 பயணிகள் வருகையுடன் 702 விமான பறத்தல்கள் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. கடந்த 05 ஆண்டுகளின் போதான பதிவுசெய்யப்பட்ட திரண்ட நட்டங்கள் 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா 15.4 மில்லியன் தேறிய இலாபம் உள்ளடங்கலாக ரூபா 217.4 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போதான வருமானம் மற்றும் செயற்பட்டுச் செலவினம் முறையே ரூபா 152.4 மில்லியன் மற்றும் ரூபா 137.6 மில்லியனாக இருந்தது. | உலகளாவிய நோய்தொற்று நிலையால், இலங்கை அரசாங்கம் JIA இற்கு சென்னைக்கும் இடையிலான சர்வதேச விமான செயற்பாடுகளை தடுத்துவைக்க தீர்மானம் எடுத்திருந்தது. ஆகவே, 2022 திசெம்பர் வரை JIA இற்கு சர்வதேச விமானங்கள் எதுவும் செயற்படவில்லை. அந்நேரத்தில் ஒரே ஒரு விமானம் மாத்திரம் JIA இற்கு சென்னைக்கும் இடையிலான நாளாந்த செயற்பாட்டில் இருக்கின்றதுடன் JIA இல் கிடைக்கும் வரையறுத்த கட்டமைப்புக்குள் இலாபத்தை அதிகரிக்கும் நோக்கில் 2024 யூலையில் இருந்து நாளாந்த செயற்பாடுகளை இன்னொரு விமானம் தொடங்கப்பட உள்ளது. | வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமான வழியிலும் இலாபத் தன்மையுடனும் எதிர்கால ஸ்திரதன்மைகாக அதிக விமானங்கள் பறப்பதற்கும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் செயற்படுத்தவதற்கும் தரமுயர்த்தவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) AASL அமைச்சரவை அனுமதியுடன் பிராந்திய சர்வதேச விமான நிலையமாக யாழ்ப்பாண விமான நிலயத்தின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் தொடர்பில் 2019 யூன் 13 அந் திகதிய AE/1/3/(CA/19/162) ஆம் இலக்க கடிதம் மூலம் சிவில் விமான | இக்கூற்றுடன் உடன்படுகின்றோம். எவ்வாறாயினும், கட்டம் I பூர்த்தியான பின்னர் விமான நிலைய செயற்பாடுகள் 2019 ஒக்தோபரில் தொடங்கப் பட்டிருந்ததுடன் கோவிட் 19 | அமைச்சரவை தீர்மானம் மற்றும் குழு அறிக்கை பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| போக்குவரத்து அதிகாரசபையின பணிப்பாளர் நாயகத்தால் அறிவுறுத்தப் பட்டிருந்தது. கடிதத்தின் பிரகாரம் உரிய அமைச்சு செயலாளரால் நியமிக்கப்பட்ட செயற்படு குழவின் பரிந்துரைகளின் பிரகாரம் உடனடியாக 03 கட்டங்களில் யாழ்ப்பாணம் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மாகிகப்பட்டது. இதன்படி கட்டம் II இன் அபிவிருத்தி உடனடியாக தொடங்கப்பட்டு 2019 திசெம்பர் 01 இல் முடிவுறுத்த வேண்டும். எவ்வாறாயினும் அபிவிருத்தி வெலைகள் இன்னமும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | நோய் தொற்று காரணமாக செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதுடன் 2022 திசெம்பர் திரும்ப தொடங்கப்பட்டது. | |
